**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C.**60/2024

**Prosecution Witness** : 5

| **Name** | : | திரு. செந்தில் குமார் | **Caste** | : | |
|---|---|---|---|---|---|
| **Father's Name** | : | திரு. கிருஷ்ணன் | **Calling** | : | |
| **Village** | : | அம்மாபட்டி போஸ்ட் | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 24 |
| | | | **Dated** | : | 29.08.2024 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**Accused present. Both side counsels present.**

பட்டியல் சாட்சி 5 திரு. செந்தில் குமார் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வேலை பால் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 06.08.2023 ம் தேதி காலை 08.00 மணி அளவில் சரவணன் என்பவரை புகழ்நாதன் ரெட்டியார் சத்திரத்தில் உள்ள மேரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டு திரும்பி வீட்டிற்கு வந்து சரவணனை புகழ்நாதன் இறக்கி விட்டார். அப்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகி உள்ள எதிரி ராஜா, புகழ்நாதனை பார்த்து தேவிடியா

பயலே என் எதிரியுடன் ஏன்டா போர என்று கேட்டு சண்டை போட்டார். அவரை அடித்து கீழே தள்ளி விட்டார். அதன் பிறகு புகழ்நாதனை, செல்வக்குமார் என்பவர் காரை எடுத்து வந்து மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும் வாடா என்று என்னை கூப்பிட்டார். புகழ்நாதனை மேரி மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது பல்ஸ் குறைவாக இருந்ததால், திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு உள்ள டாக்டர்கள் அவரை பரிசோதனை செய்து விட்டு அவர் இறந்ததாக கூறினார்கள். இது சம்பந்தமாக ஆத்தூர் குற்றவியர் நடுவர் நீதிமன்றத்தில் 09.08.2023ம் தேதியில் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த வாக்குமூலம் தான். அது **Ex.P**5. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எந்த காரில் அழைத்து சென்றோம் அது என்ன மாடல், எந்த பதிவு எண் என போலீஸ் விசாரணையில் கூறியிருக்கிறேன். புகழ்நாதனுக்கு ஏற்பட்ட காயத்திற்கு இரத்தம் ரோட்டில் சிந்தியது என்றால் இல்லை. அதே போல காரிலும் எந்த இரத்தமும் இல்லை. என் தோட்டத்திற்கு அருகில் தான் புகழ்நாதனின் தோட்டமும் உள்ளது என்றால் இல்லை. தோட்டத்தில் எனக்கு வீடு இல்லை. எனது தோட்டத்திற்கு அருகில் மருத்துவர் சரஸ்வதியின் தோட்டம் இருக்கிறது (பட்டியல் சாட்சி 14). மேற்படி டாக்டரும், இன்னொரு டாக்டரும் புகழ்நாதனுக்கு சிகிச்சை அளித்தனர். டாக்டர் சரஸ்வதி மேரி மருத்துவமனையின் உரிமையாளர் என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனையில் 5 நிமிடம் இருந்து இருப்போம். நாங்கள்

மருத்துவமனைக்கு சென்றவுடம் பல்ஸ் பற்றி மருத்துவர் எழுதிக் கொண்டார். எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று மருத்துவரிடம் சொல்லவில்லை. மருத்துவமனைக்கு காலை 10.00 மணிக்கு சென்றோம் என்றால் சரிதான், 10.30 மணி இருக்கும். செல்லும் வழியில் என் தாய் மற்றும் தகப்பனாரான பட்டியல் சாட்சி 6 மற்றும் 7 ஐ அழைத்து சென்றதாக போலீஸ் விசாரணையில் சொல்லி இருக்கிறேன். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள அனைத்து சங்கதிகளும் உண்மைக்கு மாறானது என்றும், நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2024.08.29 18:37:53 +0530